1972 மார்ச் 22]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒளிமயமான எதிர்காலத்தில் எண்ணப்பட வேண்டிய திட்டம் அது. இன்னும் ஒளி பிறக்கவில்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : புதிதாக தமிழகத்தில் ஏற்படுத்த இருக்கும் மருந்தகங்களில் மலைப் பகுதிகளுக்கு முதலிடம் கொடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவ மனை ஏற்படுத்துகிற போது பஞ்சாயத்து ஒன்றியத்தின் அடிப்படையில் ஏற்படுத்துவது தான் அரசாங்கத்தின் இன்றைய முறை. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் பிரதம சுகாதார நிலையம், குடும்பக் கட்டுப்பாடு மருத்துவ மனை, அதையொட்டி தாய்சேய் நல விடுதி ஐந்திலிருந்து ஏழு எட்டு வரை யில் கட்டுவது என்பது இன்றுள்ள முறை. மலைப்பகுதிகளில் சில பின்தங்கிய பகுதிகளுக்கு அங்குள்ள மக்களுக்கு மருத்துவ வசதி வழங்க நடமாடும் மருத்துவமனை நடத்துவதற்கு ஓரளவிற்குத்தான் வழி செய்ய முடிகிறது. அங்குள்ள மக்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்து ஒரு மருத்துவ மனை சிறிய அளவில் நடத்தப்படுவது இன்றி யமையாத தேவை என்று அரசால் உணரப்படுமானல் அப்போது நடத்தப்படும்.

Common examination for VIII standard.

* 618 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to hold common examinations for all VIII standard students in the State; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1971 ஏப்ரல் திங்களில் நடைபெற்ற தேர்வு முதற்கொண்டு ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் அனைத்துப் பள்ளிகளுக்கும் எட்டாம் வகுப்பு ஆண்டிறுதித் தேர்வுக்கான பொது வினத் தாள்கள் தயாரிக்கப்படுகின்றன, விடைத் தாள்கள் அந்தந்தப் பள்ளிகளிலேயே தான் திருத்தப்படுகின்றன. விடைத் தாள்களை வேறு பள்ளி ஆசிரியர்கள் திருத்த வேண்டும் என ஆணையிடும் செயற்குறிப்பு இப்போது பரிசீலனையில் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்தப் பரீட்சைக்கு முன்னதாகவே கேள்வித் தாள்கள் வெளியாகாமல் இருப்பதற்கும், அந்தந்தப் பள்ளி மாணவர்களின் வினாத்தாள்களை அதே பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் திருத்தாமல் இருப்பதற்கும் சர்க்கார் வேறு ஏதாவது வகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே 1941-ல் இருந்து 1961-ம் ஆண்டு வரை ஈ.எஸ்.எல்.ஸி. என்று பொதுத் தேர்வு நடைபெற்று வந்தது. பிறகு அது நிறுத்தப்பட்டது. மறுபடியும் எட்டாவது வகுப்பிற்கு அந்தந்தப் பள்ளிகளிலேயே தேர்வு நடை பெறுகிற முறை கையாளப்பட்டு வந்தது. சாதாரணமாகத் தனியார் பள்ளிகளிலும், ஒன்றியப் பள்ளிகளிலும் படித்து வருகிறவர்கள் உயர் நிலைப் பள்ளிகளில் எடுத்துக் கொள்வதற்கு பல தகராறுகள் இருந்தன. ஒரு பொதுத் தேர்வு நடந்து அதில் வெற்றி பெறுகிறவர் கள் மறு தேர்வு நடத்தப்படாமல் சேர்த்துக் கொள்வதற்கு ஒரு சூழ்நிலை ஏற்படுத்துவதற்கு பொதுக் கேள்வித்தாள்கள் மாவட்ட அளவில் தயாரிக்கப்படுகிறது. அவை மாவட்ட தலைமை கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு, பாதுகாப்போடு தயாரிக்கப்பட்டு வழங்கப்படும். எஸ்.எஸ்.எல்.சி.யைப் பொறுத்த வரையில் பாதுகாப்பான முறையில் கேள்வித் தாள்கள் தயாரிக்கப் பட்டு தரப்படுகின்றன. திருத்துவதற்கு வேறு பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னால் நிர்வாகச் செலவு போன்ற வேறு பல நிலைமைகள் ஏற்படும். நிதிவசதியை ஒட்டித்தான் அது செய்யப்படுகிறது. கேள்வித் தாள்கள் மாவட்ட அளவில் பொது வாகத் தயாரிக்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : பழைய எலிமென்ட்ரி ஸ்கூல் லீவிங் சர்டிபிக்கட் என்று பழைய மாதிரி கொண்டு வருகிற நிலை இருப்பதால் இதனால் இப்போதுள்ள நிலைக்கும் அப்போதிருந்த நிலைக்கும் ஏதாவது கல்வித் தரம் குறையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்வித் தரம் உயருகிற நிலை அல்ல. எட்டாவது படித்தவர்கள், தனியார் பள்ளி களாக இருந்தாலும் சரி, ஒன்றியப் பள்ளிகளானாலும் சரி, அல்லது வேறு எந்தப் பள்ளிகளானாலும் சரி, எட்டாவது வகுப்பு தேறி வருகிறவர்கள் மறுபடியும் தேர்வு எழுதி ஒன்பதாவது வகுப்பில் சேர்த்துக்கொள்ளும் இடர்பாடு இல்லாமல் செய்வதற்குப் பொதுத்

1972 மார்ச் 22]

தேர்வு என்று வைத்துவிடுவதால் பாடம் சொல்லிக் கொடுப்பவர்கள் அலட்சியமாக இல்லாமல் சொல்லிக் கொடுக்கும் சூழ்நிலையும் ஏற்படும். கல்வித் தரம் ஓரளவு உயர வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் பொதுக் கேள்வித் தாள்கள் தயாரிக்கப்பட்டு அனுப் பப்படுகின்றன.

தஞ்சை மாவட்டத்துக்குப் புதுக் கல்லூரிகள்.

* 619 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில், இந்தக் கல்வியாண்டில் எத்தனே புதிய கல்லூரிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தஞ்சாவூர் மாவட்டம், மன்னர்குடியில் ஒரு அரசினர் ஆண்கள் கலேக்கல்லூரி 1971–72-ம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலேவர் அவர்களே, நடப்புக் கல்வி யாண்டில், புதுக் கல்லூரிகள் அமைக்கக் கோரி எந்தெந்த இடங்களி லிருந்து அரசுக்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன? அவைகளில் எவை எவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சென்ற ஆண்டைப் பொறுத்தவரை, மன்னர்குடி, திருப்பூர், உடுமலேப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் அரசாங்கக் கல்லூரிகள் வைக்கப்பட்டன. தனியார் துறையில் ஏழு கல்லூரிகள் வைக்கப்பட்டன. மொத்தம் 169 கல்லூரிகள் இருக்கின்றன. வருகிற ஆண்டு புதுக் கல்லூரிகள் அரசுத் தரப்பில் நான்கு வைப்பதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்கள் என்பதும் தனியார் துறையில் என்னென்ன கல்லூரிகள் என்பதுபற்றி பல்கலேக் கழக முடிவு அரசினருக்கு வர வேண்டும். பிறகுதான் 1972–73-ம் ஆண்டுக்கான கல்லூரிகள் பற்றி அறிவிக்க இயலும்.